**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 06.11.2020 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 975/E/2020**

திரு கே.பாலசுப்பிரமணியன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பழனி வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமை ச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 26.08.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 26.10.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 25.01.2020 |

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (06.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு கே.பாலசுப்பிரமணியன், அவர்கள் தனது சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால், இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக்கொண்டு விசாரனை செய்ய இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி உஷா, பொதுத் தகவல்

அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 26.08.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திண்டுக்கல் மாவட்டம், பழனி டவுன், சிவகிரிப்பட்டி கிராமம், அண்ணா நகர் மெயின் ரோடு, T.S.No:5/2 பிளாக் எண்.1, பட்டா எண் 14-ல் வார்டு எண்.1-ல் கண்டுள்ள பட்டா நிலங்களின் புதிய Correlation எண் கேட்டதற்கு வேண்டும் என்றே எதிர்புறம் உள்ள 1A2, 1A2 TS No: 24/1A1 பிளாக் 31 வார்டு 4-ல் வேறு நபர்களுக்கு உள்ள பட்டா எண்களுக்கு உள்ள கார்லேசன் எண்கள் கொடுத்துள்ளார்கள் எனவும், பட்டா எண்.14-க்கும் TS No.5/2-க்கும் வேறு பட்டா எண்களுக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றும், TS No 5/2 உள்ள பட்டா எண் 14-க்கு கட்டுப்பட்ட நிலம் ஏக்கர் 1-க்கும் அடி 11823 உள்ள அடங்கிய 12 பிளாட்டுகள் மற்றும் 30 அடி / 334 அடி நீளமுள்ள இடங்கள் ஏக்கர் 1ம் சதுரடி 5149ம் காலிமனை கீழ் மேல் 334 அடியும் தென்வடல் 20 அடியும் கொண்டு காலிமனைக்கும் புதிய கார்லேசன் எண்கள் வேண்டியும் மற்றும் அது தொடர்பான இதர விவரங்களையும் தகவலாக கோரி, பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பழனி டவுண், பழனி என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 17.12.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 26.10.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பழனி, திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 25.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதேப் பொருள் தொடர்பாக, இவ்வழக்கு தொடர்புடைய மேல்முறையீட்டாளர் ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ள பிறிதொரு வழக்கானது, வழக்கு எண்.SA 13021/E/2019 28.10.2020 ஆம் நாளன்று தொலைபேசி வாயிலாக ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலரால் உரிய தகவல் வழங்கப்பட்டுள்ள விவரம் மேல்முறையீட்டாளரால் தெரிவிக்கப்பட்டு, வழக்கும் முற்றாக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கில் தனியாக விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**வழக்கு எண்.SA 975/E/2020**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பழனி வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**மனுதாரர்**

திரு கே.பாலசுப்பிரமணியன்,
த/பெ. கே.வி.குழந்தைவேல்,
எண்.3/B, இராம் நகர், 6-வது தெரு,
நங்கநல்லூர்,
சென்னை - 61.

Copy to: Judgement File.
*"VP / PA -10.11.2020"*